அதிகார போதையால் அந்நீதி புரிந்தனர் ஆட்சியாளர்!

2½ ஆண்டு ஆட்சியில் மக்கள் கண்டது ஏமாற்றமே!

மாற்றுக்கட்சியினரை மட்டந்தட்டுவதே ஆட்சியாளர் நோக்கம்

சுதந்தரதின விழாவில் கண்ட மகிழ்ச்சி குடியரசு விழாவில் குன்றிப்போனதேன்?

காசா சுப்பராவ் கடாவுகிறார்!

"காங்கிரஸ் பதவி வகித்து வந்த கடந்த இரண்டரை ஆண்டுகளில், நிர்வாகம் சீர்கேடடைந்திருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. அன்னிய ஆட்சி அகன்றதும் நல்லகாலம் பிறக்கும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த மக்களின் ஆசையில் மண் விழுந்து விட்டது. எங்கும் ஏமாற்றமே காட்சியளிக்கிறது. சுதந்திர தினக்கொண்டாட்டத்தில் காணப்பட்ட எல்லையில்லா உற்சாகம் குடியரசு தினவிழாவில் காணப்படவில்லை. இதற்குக் காரணமென்ன? இதனை நாட்டு நலத்தில் அக்கறையுள்ளவர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டுவது அவசியம்.

காங்கிரஸ் தலைவர்களில் ஒரு சிலர்தவிர மற்றபெரும்பாலோர் அதிகார போதையினால் தமது ஒழுக்கத்தையே இழந்துவிட்டனர். அதிகாரமோகம் காங்கிரஸ்ஸ்தாபனத்தின் சார்பாக நடந்து தங்களது கோஷ்டியைச் சேராதவர்களை அதிகாரத்திலுள்ளவர்கள் அடக்குகின்றனர். சமீபத்தில் பார்லிமெண்டுக்கு அபேட்சகர்கள் பொறுக்கியெடுக்கப்பட்டதானது. ஒரு சிலர்கள் பொதுமக்களின் அபிப்பிராயத்தை அலட்சியம் செய்திருக்கிறார்கள் என்பதற்கு சாக்ஷியாகும். சட்டப்படி சட்ட மன்றமே முழு வலிமையும் பெற்றதாகும். சட்ட மற்றம் நல்லதாயிருந்தால் ஆட்சி நல்லதாக இருக்கும். எனவே சட்ட மன்றத்துக்குச் சரியான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பது அவசியம். சிறிய அரசியல் லாபங்களுக்காக தகுதி முறைகள் இருக்கும்போது, சட்ட மன்றங்களில் தகுதி முறைகளே கவனிக்கப்படாதது வருந்தத் தக்க விஷயமே"

அண்மையில் சென்னையில் அகில இந்திய குடியரசுக் கட்சியினர் வெளியிட்ட தேநீர் விருந்து சாரத்துக்குப் பதிலளிக்கையில் தோழர் காசா சுப்பராவ் வெளியிட்ட கருத்துக்கள் காம் மேலே எடுத்துக் காட்டப்பட்டுள்ளவை.

"எப்பொழுது பார்த்தாலும் காங்கிரசையும், காங்கிரஸ் ஆட்சியாளரையும் குறை கூறுவதே இவர்கள் வேலை".

பரந்த மனப்பான்மை என்பதே இல்லாதவர்கள்; குறுகிய மனப்பான்மையினர் கோணல் புத்தியினர்"

எல்லாவற்றையும், நம்பை இழித்தும் பழித்தும் பேசும் காங்கிரஸ் அன்பர்களும், ஆட்சியாளருமான தோழர் காசா சுப்பராவின் மேற்கண்ட உரைகளை அப்படியே அனுமானம் செய்ய விழைகிறோம்.

"அன்னிய ஆட்சி அகன்று நல்லகாலம் பிறக்கும் என்று மக்கள் எண்ணியிருந்த எண்ணத்தில் மண்ணை போட்டவர்கள் காங்கிரஸ் ஆட்சியாளர்" என்பது போன்ற வெகுண்ணை வீசி மற்றும் கட்சித் தோழர்களும் தாங்குவர். அப்படிப்பட்ட கண்டனங்கள் பலவற்றை காசா கைகளால் தொடுக்கிறார்.

காங்கிரஸ் ஆட்சியை இரண்டரை ஆண்டுகளில் நிர்வாக சீர்கேடுற்றது என்பதை யாரும் மறுக்க முடியாது என்று அறுதியிட்டுக் கூறுகிறார் அவர்.

அத்துடன் நின்றாரா இல்லை; சுதந்திர தினவிழாவையும், குடியரசு தினவிழாவையும் ஒப்பிட்டுக்காட்டி, முன்னது ஆனந்த விழா, பின்னது அவலக் கூத்து என்று இடித்துக்காட்டுகிறார் இடிச்சுக்காட்டியது மட்டுமின்றி காங்கிரஸ் நலம் நாடும் நலனறிவாளர்கள் செய்ய வேண்டியது பற்றி யோசித்து பார்க்க வேண்டிய அவசியம் என்றாவது அறிவுறுத்துகிறாரெனில் காங்கிரஸ் கரைந்து விட்டது—கரைந்து கொண்டிருக்கிறது என்பதற்கு இதைவிட வேறு எடுத்துக் காட்டு என்ன தேவை?

அடுத்து, தோழர் காசா சுப்பராவ் ஆட்சியாளர்களின் எதேச்சதிகாரம், ஒழுங்கீனப் போக்கு ஆகியவற்றைச் சுட்டிக்காட்டியிருப்பதும் கவனிக்கத்தக்கது. அதிகார போதையால் ஆட்சியாளர் மாற்றுக் கட்சியினரை நசுக்கச் செய்யும் முயற்சிகளை நிந்தித்த உண்மை. அதனைக் கண்டு இன்று தமுதல்வர் தாங்கிருந்தாரைச் சுட்டிக்காட்டியிருப்பதும் பாராட்டத்தக்கதே.

காங்கிரசின் அதிகார

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

Phone No 4502
விலை அரை அணா
Regd. No.M. 5458
இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (7—2—50) வெளியூர் (8—2—50) [இதழ் 162

நாடு நலம்பெற நல்லறிவாளர் தேவை

முதியோர் கல்வி வளர அறிவுப்பணி பரவவேண்டும்

முதியோர் கல்வி பற்றிய ஆய்வுரை

"வாக்காளர்களே, இனி நமது எஜமானர்கள். கல்வி அறிவு பெற்ற வாக்காளர்களின்றி ஜனநாயகம் வெற்றி பெறுது. அறியாமையினாலே அவஸ்தியத்தினாலோ வாக்காளர் தமது வாக்குரிமையைத் தவறாகவோ உபயோகப்படுத்தினால் குடியரசே குலைய நேரிடும். ஆதலின் முதியோர்க்குக் கல்வி புகட்டுவது எதிர்காலத்தில் மகத்தான ஒரு பொறுப்பாகும்"

என்று சென்னை கவர்னர் பவநகர் மகாராஜா சென்னையில் முதியோர் கல்வி வாரத்தை ஆரம்பித்துப் பேசியபோது குறிப்பிட்டார்

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுவது அந்நாட்டு மக்களின் கல்வி அறிவேயாகும். இந்த உண்மை இதுகாறும் எழுத்தளவோடும், பேச்சளவோடுமே இருந்து வந்திருக்கிறதேயன்றி செயலளவில் வந்ததில்லை. அதனைச் செயலளவில் செய்து காட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டுவிட்டது. வயது வந்தோர்க்கெல்லாம் ஓட்டுரிமை வழங்கப்பட்டு, அந்த ஓட்டுகள் மூலமே அரசியல் நடைபெறவேண்டிய அளவுக்கு நாடு ஜனநாயகத்தில் முன்னேறிவிட்டது இன்று. எனவே சென்னை கவர்னர் குறிப்பிட்டிருப்பதுபோல் வாக்காளர்களே எஜமானர்களாவர். இந்த எஜமானர்கள் கல்வி அறிவு பெருவிட்டால், வாக்குரிமையைச் சரிவர பயன்படுத்த முடியாது. அறியாமையை அகற்றி, ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டிய வாக்காளர் கல்வி, அறிவு பெருவிடில் அறியாமையை வளர்க்க, ஜனநாயகத்தைச் சிதைக்கப் பயன்படும் கருவிகளாகிவிடுவர். ஆகவே, அரசியலார் முதியோர் கல்வி விஷயத்தில் அதிக அக்கரை செலுத்த வேண்டும். முதியோர் கல்வியைப் பரப்புவதென்றால், அதற்கென பள்ளிகள் அமைத்துப் பணியாற்றுவதென்றும், முதியோர் கல்வி என்று நினைப்பது தவறு. நாடு, நகர், பட்டி தொட்டிகளெங்கும் நல்லறிவாளரைக் கொண்டு அவ்வப்போது அறிவுப் பிரசாரம் செய்யும்படி செய்ய வேண்டும். அதுவே மக்களை அறிவுடையோராகச் செய்யும்; ஏட்டறிவு பெருவிடினும் கேள்வி அறிவால் மக்கள் அறிவு பண்படக்கூடும். அத்தகைய மக்கள் தமது வாக்குரிமையைப் பயன்படுத்தினால், அதனால் நாடு நலம்பெறும். ஜனநாயகம் வளரும் என்பதில் ஐயமில்லை.

போலீஸ் ஆயுதசாலையில் களவாடங்கள் திருட்டு

உகாரா போலீஸ் ஆயுதசாலையிலிருந்து 133 துப்பாக்கிகள் களவாடப்பட்டிருக்கின்றன என்பது தெரியவந்திருக்கிறது. இது சம்பந்தமாக ஒருவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்.

ஹைட்ரோஜன் குண்டு; 1860 லேயே ரஷ்யா கண்டுபிடித்துவிட்டது?

லண்டன், பிப். 6—

மிகவும் வீரியமுள்ள ஜல வாயு (ஹைட்ரோஜன்) குண்டை ரஷ்ய விஞ்ஞானி ஒருவர் 1860 லேயே கண்டுபிடித்துவிட்டதாக ஸ்வீடிஷ் பத்திரிகை 'எஸ்பிரஸ்ஸோ'வில் ஒரு செய்தி பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இரண்டாவது ட்ரூமன் ஸைஸண்டர் மன்னரிடம் இந்த ஜலவாயு குண்டு அப்பழுங்க சமர்ப்பிக்கப்பட்டதென்றும், அவர் அதை ஏற்க மறுத்துவிட்டார் என்றும், ரஷ்ய ட்ஸார் மன்னரை ஒழிக்க இதை ஒரு சாதனமாக உபயோகிக்க ரஷ்ய விஞ்ஞானியான மூயன்றன்கிற தகவல்களை எடாலிய நிபுணர்களடங்கிய கமிஷன் கண்டுபிடித்திருப்பதாக, வார்ஸா கம்யூனிஸ்டுகள் கம்புனின்றனரர் என்ற அச்செய்தி கூறுகிறது.

பிரிட்டிஷ் மந்திரி சபைக் கூட்டம்

தெ. கி. ஆசியாவில் கம்யூனிஸ்டு ஆபத்துபற்றி பெவின் அறிக்கை விடுப்பார்

லண்டன், பிப். 6 —

பிரிட்டிஷ் மந்திரி சபைக் கூட்டம் செவ்வாய்கிழமை நடைபெறவிருக்கிறதெனறும், அதில் அயல் நாட்டு மந்திரி தோழர் பெவின்தென் கிழக்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள கம்யூனிஸ்டு ஆபத்து குறித்து ரிப்போர்ட் சமர்ப்பிப்பார் என்றும் தெரிகிறது.

இந்தோ சீனாவில் ஹோசிமின் சர்க்காரை ரஷ்யா அங்கீகரித்ததால் ஏற்பட்டுள்ள நிலைமையைக் குறித்தும் மந்திரி சபை விவாதிக்கும்.

அடுத்த வார மத்தியில் பால்டே சர்க்காரை, பிரிட்டன் அங்கீகரித்துவிடும் என்றும், பிரிட்டனுடன் சேர்ந்தார் போலவோ அல்லது சில நாட்கள் கழித்தோ தோயுனெட் ஸ்டேட்ஸ் பால்டே சர்க்காரை அங்கீகரித்துவிடும் என்றும் விஷயமறிந்த வட்டாரங்களில் கூறப்படுகிறது.

கம்யூனிஸ்டு பெட்ரோல் ஸ்டாக், தீக்கிரை

ஹாங்காங், பிப். 6—

பிரிட்டிஷ் எல்லைக்குள் அமைந்துள்ள கம்யூனிஸ்ட் பெட்ரோல் ஸ்டாக்கிற்கு நேசநாட்டு விமானங்கள் குண்டுகளை வீசியதால் 50,000 கலன்பெட்ரோல் தீக்கிரையாயிற்று. நிட்டேனி சேர்ந்த எதிர்தரப்பினரும் பக்கத்திலுள்ள நிலைகளிலிருந்து பத்திற்கொண்டனவென்றும், சாண்டலிலிருந்து வரவேண்டிய பெட்ரோல் குண்டு விமானம் தரையிறங்க முடியாமல் திரும்பிவிட்டதாகவும் தெரிகிறது.

மாலை மணி

சென்னை 7—2—50 செவ்வாய்க்கிழமை

மருந்தறியா மருத்துவர்!

"நமக்கென்ற பொதுவான அரசியலொன்று ஏற்பட்டு விட்டதாலோ, ஒரே டாமினியனில் வாழ்வதாலோ நாம் ஒற்றுமையடைந்து விட்டோமென்ற கூறிக் கொள்ள முடியாது. கலாசாரத் துறையிலும், மக்கள் வாழ்க்கையிலும் இன்னும் மற்ற மற்றத் துறைகளிலும் நாம் ஒடுங்கி வொருவர் புரிந்து கொள்ளாத பட்சத்தில், உண்மையான ஒற்றுமை ஏற்பட முடியாது."

சுதந்தர சுயராஜ்ய சர்க்காரின் தேசீய மந்திரி சபையின் காங்கிரஸ் அமைச்சர் தோழர் பி. கோபாலரெட்டியவர்கள் இக் கசப்பான உண்மையை மறைக்க முடியாமல் விண்டு விட்டார் சென்னைக் கூட்ட மொன்றில் கோகலே மண்றத்தில் தட்சிண பாரத இந்துஸ்தானி பிரசார சபை அதரவில் நடைபெற்ற கூட்டத்தைத் துவக்கி வைத்துத் தோழர் கோபாலர்; இந்தியின் அவசியத்தை எப்படி எப்படியோ எடுத்துக் கூறி, இறுதியாக இப்பொடி வைத்துப் பேச்சினையும் முடிக்கத் தயங்கவில்லை! தோழர் கோபாலரவர்களின் இச்சிறு சொற்றொடரில் பற்பல பொருள்கள் பொதிந்து கிடக்கின்றன அவருக்குத் தெரிந்தோ தெரியாமலோ. தெரிந்தேதான் குறிப்பிட்டாரெனின், அவரது துணிவுக்கும் தீரத்துக்கும் நம் பாராட்டு! தெரியாமல், பேச்சு வாக்கில் விட்டுவிட்டாரெனின், காலப் போக்குக்கும் கருத்து வளர்ச்சிக்கும் தன்னை அர்ப்பணித்துக்கொண்டார்; இதை இப்படித் தன்னையறியாமலே சொல்லித் தீர வேண்டிய கட்டாய நிலைக்கு வந்துவிட்டாரென்பதுகண்டு மகிழ்கிறோம்.

இந்தியா என்று இன்று வழங்கப்பெறும் இம்மாபெரும் துணைக் கண்டம், என்றுமே ஒரு தனியாட்சிக்குட்பட்ட பெரு நாடாக இருந்ததில்லை யென்பதையும் வரலாறு தெரிந்தகால முகற்கொண்டு, இன்றைய துணைக்கண்டம் ஒன்றுக்கு மேற்பட்ட பல ஆட்சி நிர்வாகங்களின் கீழ் பல பகுதிகளாகவே பிரிந்திருந்ததென்பதையும், இரு பெரு கலாசாரங்கள் ஈண்டு ஒன்றோடொன்று முரணி, பெருத்த அளவில் முரணி வந்திருக்கின்றன வென்பதையும், அப்பெரும் அவுரங்கசீப்பும், அசோகரும். அர்ஷ நிங்கூட இம் முரணிய கலாசாரங்களை இணக்கவும், பெரு நாடு தென்னாட்டை ஒரு குடைக் கீழ்க் கொணரவும் நினைத்த நினைப்புகள்; எடுத்த முயற்சிகள் பயன்தரவில்லை யென்பதையும் நாம் கூறுவிட்டாலும்; ஆதிக்கக்காரர் மறைத்தாலும், சரித்திர ஏடுகள் சான்றுகள் பலவுடன் தெளிவின் எடுத்தோதுகின்றன. அதிகார பலத்தைக்கொண்டு இருவேறு நாகரிகங்களை — வேறுபட்ட நாகரிகங்களை, கலாசாரங்களை, அவற்றைக் கொண்டொழுகும் மக்களை, அம் மக்கள் வதியும் நிலப் பரப்புகளை இணைத்துவிட முடியுமென நினைத்த 'ஏக சக்ராதிபதிகள்' எத்தனைபோபோ் தோல்வியுற்றிருக்கின்றனர் தம் முயற்சிகளில். மிகமிசப் பிற்பட்ட காலத்தில் பிரிட்டிஷார் இப் பெரு நிலப்பரப்பனைத்தையும் வியாபாரத் துறையில் தம் மாதிக்கத்தினுள் கைவரப் பெற்றுக்கொண்ட பின்னரே, தங்களுடைய நிர்வாக வசதிகளை முன்னிட்டு, இப்பழம் பெருந் தென்னாட்டை வடநாட்டோடு இணைத்து முடிச்சுப்போட்டு, இவ்வண்ணம் வந்துற்ற பெரு நிலப்பரப்பைப் பல்வேறு மாகாணங்களாக வகுத்துக் கொண்டு, அம் மாகாணங்களனைத்தினுடைய கடிவாளத்தையும் மதிய ஆட்சியென்ற பெயரால் வட கோடியில் ஓரிடத்தில் இறுகப்பிடித்துவைத்துக்கொண்டு விடும்பாத மக்கள் மீது, வேண்டாத யதேச்சாதிகாரம் தொடங்கலாயிற்று அவ் ஏகாதிபத்திய யதேச்சாதிகார ஆட்சியின் தொடர்ச்சியாகவே இந்தியசுயராஜ்ய ஆட்சியும், அதனையடுத்து இன்றைய குடியரசுநாடகமும் ஆரம்பமாகியுள்ளது. இந்த நிலையில் அமைச்சர் கோபாலரின் 'அர்த்த புஷ்டியான கருத்துரை எத்துணை பொருத்தமும் தகுதியும் மிக்கது என்பதை நாம் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

அமைச்சர் கோபாலர் நோயைத் தான் சரிவரக்கண்டு பிடித்தார்—நோய்பற்றிய விளக்கத்தையும் தந்துரைத்தார், அதற்கு மட்டுமே தான் நம் பாராட்டு. ஆனால் நோயின் காரணத்தையோ, அந் நோயைப் போக்குவதற்கான சரியான, மருத்துவத்தையோ காட்டவில்லை கோபாலர். 'நோய் நாடி நோய் முதல் நாடி அதன் வாய் நாடி வாய்ப்பச் செயல்' என்றார் வள்ளுவர். நம் அமைச்சர் நோய் நாடினர்; ஆனால் நோய்முதலையோ அதன் வாயையோ, வாய்ப்பச் செய்யக்கூடிய சரியான காரியம் என்னவென்பதையோ தெளிவுறக் கண்டாரில்லை அல்லது சொல்ல முன்வரவில்லை.

நோயைக் கண்டுபிடித்து விட்ட மருத்துவர்,-தன்னிடம் தக்க மருத்துவ வசதி இல்லாவிடில்-வேறு யாரிடமேனும் அனுப்பியிருக்கலாம் நோயாளியை மருத்துவம் பார்த்துக் கொள்ள. அதைச் செய்யவில்லை அமைச்சர் கோபாலர். உபகண்ட மக்களனைவரும் இந்தியைக் கட்டாயமாகப் பயில்வாரேயாகில், அவர்கள் உள்ளபடியே ஒரு அரசியலுக்கு உரியவராவர், ஒரு டொமினியனில் ஒரு நாட்டவராக வாழ வகுக்கையுடையவரென உபதேசிக்கிறார்,

"நாம் இந்தியர் எனக் கூறிக் கொள்கிறோம். வடஇந்தியாவிலுள்ளோர் பற்றி நாம் எதுவும் தெரிந்தவர்களாகி விடுகிறோம். அவர்கள் மொழியை நாம் தெரிந்துகொள்ளாமலிருந்தால், வடநாடு செல்லுங்கால், அவர்களுடன் தாராளமாய்ப் பேசக் கூட முடியாதுபோய்விடும். எனவே நாம் இந்தியோடு, இன்னொரு வட இந்திய மொழியினையும் கற்றுக் கொள்ளவேண்டும்."

இப்படி எடுத்துக் கூறுகிறார் அமைச்சர். அவரது கூற்றில் உண்மை முனைப்பைவிட மரண ஓட்டுச் சேர்க்கையே பெரிதும் கலந்துகிற்கிறது! வெவ்வேறு கலாசாரம், நாகரிகம், பண்பியல்பு, பழக்க வழக்கமுடை மக்களினத்தவர்களை பொது மொழி யென்ப தொன்றினை வலுக்கட்டாயப் புகுத்தி, ஒன்றுசேர்த்து ஒரு குடைக்கீழ் கொண்டுவந்துவிட இயலுமா? பல்வேறு நாகரிகப் பண்பாளையோர் அப்படிப் பொதுமொழி யொன்றினால் பிணிப்புண்டு ஒரு ஆட்சியின் கீழ் சுமுகமாய் இருந்தமைக்கு இதுவரைக்கும் வரலாற்றுச் சான்றுகளை வகையுடன் தந்துரைக்கமுடியுமா நம் அமைச்சர்? பொது மக்களனைவரிக்கும் புரியக்கூடிய அவர்கள் விரும்பி வரவேற்க்கூடிய அரசாளுகை, பண்பியல்புகளுக்கு ஒவ்வக்கூடிய ஒரு மொழிதானே பொது மொழியாக இருக்கமுடியும்? எல்லா வகையிலும் ஒத்த மனப்போக்கு கூடை, ஏற்றசாழ்வுகளை ஒருமித்துக் கூறுபோட்டுக் கொள்ளக்கூடிய, மொழி இனக்கலாச்சாரங்களில்பெரிதும் ஒற்றுமை புடையமக்கள்கூட்டமொன்றுக்குப்பொருவான அரசியல்வகுப்பதா. அன்றி எல்லா வகுத்ததே வாய்க்கால் என்ற தோரணையில் எப்படியோயார லோ விசிபெறிந்து கைவரப் பெற்ற ஆட்சியதிகார மமதைக் கொண்டு, பொதுவான அரசியலென்பதாக ஒரேயை சிருஷ்டித்துக்கொண்டு, அவ் அரசியலுக்கேற்ப மக்களைப் பொதுமைப்படுத்த (?) அவர்களிடையே ஒற்றுமையேற்படுத்த (?) பொருந்தாத-ஒவ்வாத பலாத்காரச் செயல்களில் ஈடுபடுவதா? தலைக்கேற்பத் தொப்பி வாங்குவதா? அன்றி, தொப்பிக் கேற்பத் தலையைச் சீவி யெறிந்து விடுவதா? மைச்சர் கோபாலர் நல்ல மருத்துவர்தான்! ஆனால் மருந்தறியா மருத்துவர்! இல்லாத ஊருக்குத்தப் போகாத பாதையைக் காட்டுகிறார் இனம், கலை, நாகரிகம் இன்ன பிறவற்றில் மாறுபட்டுக் காணப்படும் மக்கள் கூட்டங்களை 'பிளாஸ்திரி' போட்டு ஒட்டப் பார்ப்பதால் பயனில்லை; இயற்கை முறையில் இரு வேறு வட்டார வாசிகளாக ஆக முயற்சிப்பதே, அறிவும், பொறுப்பும் நிறைந்த செயலாகும்.

தோழர் அண்ணாத்துரை

சென்னை, பிப். 5—

பெரியாருடைய அண்ணனூர் ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்கள் காலமான செய்தி அறிந்தகம் திருவள்ளுவர் விழா, நிருமணம் ஆகியவைகளில் கலந்து கொள்வதற்காக சென்னை வந்திருந்த தோழர் சி.என். அண்ணாத்துரை நேற்று நள்ளிரவு ஒரு மணிக்கு, காரில் ஈரோடு புறப்பட்டுச் சென்றார்.

ஈ. வெ. கி. சவ அடக்கம் முடிந்தவுடன் ஈரோட்டிலிருந்து கோவை சென்று விமான மூலம் சென்னைக்கு வர முயன்றும் குறித்த நேரத்தில் விமான நிலையம் அடைய முடியாமற் போன காரணத்தால் சென்னை புரசை திருவள்ளுவர் விழாவில் கலந்து கொள்ள முடியாமற் போயிற்று என்பதைத் தோழர் களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம்.

கேப்டவுன்வட்டமேஜை மாநாடு

இந்தியா, பாகிஸ்தான் புது யோசனைகளை வெளியிடும்

டர்பன், பிப். 6—

கேப்டவுனில் இன்று இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா மூன்று நாடுகளும் கலந்துகொள்ளும் வட்டமேஜை மூர்வாக்க மாநாடு எதிர்பார்த்தவரிட, நல்ல நம்பிக்கையுடனேயே தூரமாகும் என்று இங்கு கருதப்படுகிறது.

எவ்வளவோ தடங்கல்களும் முட்டுக்கட்டைகளும் எற்பட்ட போதிலும் தென்னாபிரிக்க பிரதமரும், தென்னாப்பிரிக்க மந்திரிசபைவர் கொழும்பு மாநாட்டில் இந்தியா, பாகிஸ்தான் பிரதிநிதிகளைக் கலந்து பேசுவதின் மூலமாக தென்னாபிரிக்காவில் குடியேறிய இந்தியர்களின் பிரச்னைகளுக்கு ஒரு முடிவு காண முடியுமென்று நம்பிக்கை கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்தியர்களைத் தென்னாபிரிக்காவிலிருந்து வெளியேற்றும் எண்ணம் தங்களுக்கு இல்லை என்று தென்னாபிரிக்க அரசாங்கம் ஏற்கனவே பல தடவைகள் அறிவித்திருக்கிறது.

இம்மாநாட்டில் இரு பெரும் பிரச்னைகள் மேற்கொள்ளப்பட விருக்கின்றன:—

(1) இந்தியர்களைத் தென்னாபிரிக்காவிலிருந்து வெளியேற்றும் எண்ணம் தங்களுக்கு இல்லை என்று தென்னாபிரிக்க சர்க்கார் கொள்கை.

(2) தென்னாபிரிக்காவுடன் இந்திய வர்த்தக விஷயம்.

இந்தியாவும், பாகிஸ்தானும் தாராள நீர புது போகங்களை வெளியிடலாம் என்று தெரிகிறது. இவ்விரண்டு நாடுகளும் தென்னாபிரிக்காவிலுள்ள நூற்பாலைகளுக்கும் பருத்தி விளைவோருக்கும் ஆதரவு அளிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருப்பதாகத் தெரிகிறது.

பாகிஸ்தானின் ஏற்பாடு நற்பலன் விளைக்கும்

வர்த்தக விஷயத்தை எதிர்த்து விரைவில் ஒரு முடிவு செய்யும்படி தென்னாப்பிரிக்க சர்க்கார் அதிகாரி ஒருவர் அபிப்பிராயம் கூற மறுத்துவிட்டார். ஆனால் பாகிஸ்தான் செய்துள்ள இம்முடிவு வட்டமேஜை மாநாட்டிற்கான நல்லெண்ண சூழ்நிலையை ஏற்படுத்தும் என்று தெரிகிறது.

அறிவுக் கதிர்

ஜனநாயகவாதி என்று ஒருவரைச் சொல்ல வேண்டுமானால், அவர் மற்ற மனிதர்களுடன் வாழ்வதெப்படி என்பதை அறிந்தவராயிருத்தல் வேண்டும். வெறும் மனிதக் கூட்டுறவைக் கொண்டு மாத்திரம் ஜனநாயகவாதி என்று யாரையும் சொல்லிவிடமுடியாது.

— மேரி. பி போலர்

இரங்கல்

வைத்திய வள்ளல், பெருந்தகை ஈ. வே. கிருஷ்ணசாமி அவர்கள் இயற்கை யெய்தி யமை கேட்டு ஆறாத துயரந்தி ளாழ்ந்த நாங்கள் தோழர் ஈ. வெ.கி. சம்பத் அவர்களுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் எங்களுடைய இரங்குதலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

'மாலை மணி'
அலுவகப் பணியாளர்கள்

சர்ச்சிலின் முன்னேற்பாடு!

தனது மந்திரிசபை பட்டியலும் தயார்!

லண்டன், பிப். 6—

பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் லேபர் கேவ் ஸ்தாபன வெற்றி நிச்சயம் என்ற உறுதியின் மேலில் தோழர் சர்ச்சில் தன் மந்திரிசபைப் பட்டியலையே தயாரித்து விட்டார் என்றுசொல்லப்படுகிறது. ஆனால் அந்தப் பட்டியலைப் பற்றிய விவரங்கள் எதுவும் தெரியவில்லை. அந்தப் பட்டியலில் யார் யார் இருக்கக்கூடும் என்ற ஹேஷ்யங்கள் மட்டும் வெளியிடுகின்றன.

ஈடன், ரிச்சர்ட், ஆலன், எட்வர்ட், ஹொரால்ட், மாக்மில்லன், ஆலிவர் ஸ்டான்லி ஆகியோர் சர்ச்சில் மந்திரிசபை அமைத்தால் அதில் கட்டாயம் இடம் பெறுவார் என்று உறுதியாகிறது.

இப்பொழுது மாலிஸன் எதிர்த்து வரும் லார்ட் பிரவிடென்ட் பதவியை ஈடன் ஏற்கலாம் என்றும், சர்ச்சில் மூன்றாவது தடவை மாலை மாலிலுள்ள அலுவலகத்தில் அவருடைய வாரிசாக ஈடன் பிரதமர் பதவியை வகிக்கலாம் என்றும் கூறப்படுகிறது.

அரபுகளுக்கு ஆயுத உதவி

கேப்ஸ் டவுன், பிப். 6—

அரபுகளுக்கும் இஸ்ரேலிய நாட்டினருக்கும் யுத்தவெடிப்பு ஏற்பட்டால் ஆயுத உதவி அனுப்புவதை எதிர்த்து இந்தமந்திரிகளின் நிலைமைக் எதிர்த்து எழுந்த ஆரம்பித்திருக்கின்றனவென்று ருவேப் நிருபர் கூறுகிறார். —ராய்ட்டர்

அதிகார...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

போதை, காசா சூட்டிக்கரட்டும் பெல்லாங்குகளை மட்டுமன்றி மேலும் பல இன்னல்களை விளைத்துள்ளது. அவை ஏட்டில் அடங்காதவை; நினைத்தால் நெஞ்சு பதறும். இத்தகைய நிலைமேலேதான் குடியரசு மலர்ந்திருக்கிறது! மக்களாட்சி என்ற பெயரில் மக்களுடைய சிந்தனைக்கு, செயலுக்கு, பேச்சுக்கு, எழுத்துக்கு, புதிய பொன் விலங்கு பூட்டப்பட்டிருக்கிறது. இத்தகைய பொன் விலங்கைத் தகர்த்துப் பொடிப் பொடியாக்கவேண்டுமானால், காசாக்கள் கண்டனக் கூட்டங்கள் மட்டும் போதாது. ஜனநாயகத்தில் நாட்டமுடைய முற்போக்குக் கட்சிகளோடு ஒத்துழைத்து, அந்தப் பொல்லாத பொன் விலங்கை உடைத்தெறிய முன்வரவேண்டும்.

"நாட்டு நலத்தில் அக்கறையுடையோர் ஆராயவேண்டும்" என்று கூறிய காசா சுப்பராவுக்கு நாம் தரும் பதில் இதுவே.

இந்திய அரசியல் திட்டமும் ஒரு மனு நீதியே!

எவர்க்கும் அடிபணியா திராவிடத்தை வடவர் சுரண்டுவதா?

வடநாடு வாழ, தென்னாடு தேய்வதா?

கோவை மாநாட்டில் ப. உ. சண்முகம் ஆற்றிய தலைமை உரை

[29—1—50-ல் கணியூரில் நடைபெற்ற கோவை மாவட்ட திராவிடமுன்னேற்றக் கழக மாநாட்டிற்குத் தலைமைவகித்த திருவண்ணாமலை தோழர் ப. உ. சண்முகம் அவர்கள் ஆற்றிய தலைமை உரையின் சுருக்கம் இதே தரப்பட்டுள்ளது]

தோழர் சண்முகம் தம் சொற்பொழிவின் ஆரம்பத்தில் கணியூர் பஞ்சாயத்து போர்டாரால தமக்களிக்கப்பட்ட வரவேற்பிதழுக்குன்றி தெரிவிக்கு முகத்தான் சிறிது நேரம் பேசினார்.

தோழர்களே! தாய்மார்களே!!

"திருவண்ணாமலை என்றதும் யாவருக்கும் அதனுடைய ஸ்தல புராணமும் மலையைப் ஞாபகம் வரும் அதுமட்டுமல்ல; அங்குள்ள ரமண ரீஷியைப் பற்றியும் ஞாபகம் வரலாம். ஆம் அவரைப் பற்றிய ஞாபகம் அவசியம் வரத்தான் செய்யும். ஏன், அவர் சீவ எவ்வு பிரபலமாக பிரமாதமாக விளம்பரப்படுத்தப்பட்டிருக்கிறார், பத்திரிகை முதலியவற்றால். அவர் பெருமை, மகத்துவம் மிகப் பிரமாதமாகச் சொல்லப்படுகிறது. ஆனால் அவர் இன்று இன்று என்ன? படுத்த படுக்கை; ஆம் அவருக்குநோய், பகவான் ரமணருக்கு, ரமண ரீஷிக்குத் தான் நோய்; பயங்கர நோய், பாவாத்மாக்களுக்குக் கூட வரக் கூடாதபயங்கரமான நோய், சென்னை சுந்தரவதனம் போன்றாரின் கண்காணிப்பில் உயிர் பிழைக்க உபாயங்கள் செய்யப்படுகிறது. எங்கள் ஊர் விசேடம் இதுதான்.

கனக விசயர் கல்லறைகள் பேசினரே.....?

கோவை மாவட்டமாநாடு இங்கு நடைபெறுகிறது. இன்று. பல்லாயிரவர் கூடியுள்ளோம், இது மிக முக்கியமானதொரு சபையதில் கூடியுள்ளது. அதாவது ஜனவரி 26-ந் தேதியிலிருந்து இந்திய குடியரசுப் பிரகடனம் அமுலுக்கு வந்துள்ள நேரம் இத்தகைய நேரத்திலே நாம் கூடியுள்ளோம். அரசியல் நிர்ணய சபை செய்த தீர்ப்பு ஆட்லிசர்க்கார்தந்த. இடைக்கால மந்திரிசபையினர் காலத்தில் ஏற்பட்ட சபையின் சட்டம்! இன்று இயம் முதல் குமரிவரை ஒரே ஆட்சி! கோலாகலம் இதை எண்ணும்பொழுது என் மன கண்முன் கனக விசயரின் கல்லறை தோன்றுகிறது. ஆம், அன்று தமிழரை தாழ்த்திப்பேசினர் எனத காகச் சோன் செங்குட்டுவனால் தோற்கடிக்கப்பட்டுக் கல்கமந்த அதே கனகவிசயன் கல்லறைகள் தாம் காட்சியளிக்கின்றன. நினைவுக்கண்முன் நின்று நர்த்தனமாடுகின்றனர். அக்கல்லறைகள் கேலி பேசுகின்றன "ஏ, தமிழா! உன் தன்மானம், வீரம், தீரம், யாவும் எங்கே? அன்று எம்தலையில் கல்சுமக்க வைத்ததைப்பற்றி வானளாவப் புகழ்கிறாயே, பேசுகிறாயே! பார் இன்னும் பார்முழுதும் பவனி வருகின்றனர்! குமரி முனையிலே எமது பரம்பரையினரின் கொடிபறக்கிறதே!" என்று எக்காளமிடுவதாகத் தெரிகிறது உண்மையிலேயே நிலைமை அப்படித்தானே. ஏசுகிறவைத்தான் அன்று ஆனால் இன்று தான் பிடித்து மட்டுமல்ல, காவடி தூக்கிக் கைகட்டி வாய்பொத்தி நிற்குமளவுக்கு எமது அதிகாரம்" என்று தானே கூறும். அக்கல்லறைகள்.

குடியரசுக் கோலாகலம்!

இந்த அரசியல் திட்டத்தை குடியரசுப் பிரகடன தினமையெழுத்திட இரண்டு அ. தி. சபை அங்கத்தினர்களே மறுத்துள்ளனர். சிக்கியர், சரத் சந்திரர்கள் சியினர், பார்வார்டு கட்சியினர் ஜனநாயகக் கட்சியினர், கம்யூனிஸ்டுக் கட்சியினர், திராவிடர் கழகத்தினர், மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தவராகிய நாமும் விரும்பவில்லை. பூரணத்துவம் பெற்றதாகக் கொள்ளவில்லை. மக்கள் விருப்பத்தைப் பூர்த்தி செய்யும் எனக்கொளவில்லை என்ற திட்டமாகத் தெரிவித்துள்ளனர். நாட்டிலே எஞ்சியுள்ள இந்துமகா சபையும் இதை எதிர்க்கத சமீபத்தில்தான் சென்னையிலிருந்து வெளிவரும் இந்துமகாசபை பத்திரிகையொன்றைப் படித்தேன். காங்கிரசே சொல்லும்போது எப்படி எதிர்ப்பது என்ற பல்லவி பாடியுள்ளது.

மனு நீதியே!

இன்று ஏற்பட்டுள்ள சர்க்கார் மக்களின் பிரதிநிதித்துவம் பெற்றதா? அரசியல் நிர்ணய சபையோ, ஆங்கில ஆதிக்கத்தின் கீழ் ஏற்பட்ட ஏட்டுப்பல ஏற்பட்ட சட்டசபைகளிலிருந்து இடைக்கால சர்க்கார், அதுவும் ஆங்கிலேயரால்தானேற்படுத்தப்பட்டது. அதன்மூலம் தயாரிக்கப்பட்ட தொன்றாகும் இதைத் தயாரித்த டாக்டர் அம்பேத்காரைக் கூலியும் மனு என்று ஒருர் புழுதி வாரி தூற்றுகிறார். எனை வேடிக்கை! ஆனால் ஒரு விதத்தில் இது உண்மைதான். இது மனுநீதிதான், நீதி நிர்மையற்றது. ஜனதிபதி தேர்தல், முதலில் வெற்றவந்த மக்கள் அதிகமான பேருக்கும் ஓட்டுரிமை வழங்கப்பட்டு, அவர்களால் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்என்று இருந்தது. பின்னர் அதுமாறி, மாற்றப்பட்டு, சட்டசபை அங்கத்தினர்கள் மட்டும் தேர்ந்தெடுத்தால் போதும் என்றுவிட்டது. வடக்கே மருட்சி ஏற்பட்டுவிட்டது. சமீபத்தில் நடைபெற்ற பட்டாபி சீதாராமையா, டாக்டர் புருஷோத்தம்தாஸ் தாண்டன் ஆகியவரின் காங்கிரஸ் தலைமைப் போட்டியின் முடிவு அவர்கட்கு நல்லதொரு பாடமாக, ஆனால் எச்சரிக்கையாக அமைந்துவிட்டதுபோலும்.

ஜனதிபதியா சர்வாதிகாரியா?

இன்றைய அரசியல் சட்டத்தின் சக்கை. ரிக் வேதத்தின் மொழி பெயர்ப்பு என்று யாரோ ஒரு மூர்க்கி இந்துபத்திரிகையின் குடியரசு மலரில் எழுதியுள்ளார் அவர்களுக்குப் புகழ்ச்சிப்பு, பூரிப்பு அப்படி? ரஷ்யாவிலே அரசியல் திட்டம் தயாரிக்க 5 மாதங்கள் 12 பேர்கொண்டதொரு கமிட்டிகள் வேலைசெய்து தயாரிக்கவு பின்னர் அதனைமக்களுக்கெல்லாம் ஒலிபெருக்கி மூலமும், சினிமா, நாடக மூலமும், பொதுக் கூட்டங்கள் மூலமும், பத்திரிகைகள், புத்தகங்கள், துண்டுப்பிரசுரங்கள் மூலமும் விளம்பரப்படுத்தி விளக்கங்கள் கொடுத்து மக்களின் எண்ணங்களை, திருத்தங்களைக் கேட்டனர் கேட்டுப்பிறகு மக்கள் சம்மதம் பெற்ற அதனை அமுல் நடத்தினர். அங்கு கூட இங்கு ஜனதிபதிக்குத்தரப்படுவதுபோன்ற விரிவான அதிகாரம் கிடையாது.

செக்கும் சிவலிங்கமும்!

இங்கு மாகாணங்களின் நிலை என்ன? ஒரு சாதாரண ஜில்லா கலெக்டருக்கும் குறைவான அதிகாரங்கள் தரப்பட்டுள்ளன அதுமட்டுமா? ஜனதிபதி நியமனத்தால் மாகாண மந்திரி சபையைக் கலைக்கலாம். ட்ரூமனுக்கு இல்லாத அதிகாரம், ஸ்டலினுக்குக் கிடைக்காத அதிகாரம்!

இவ்வளவும் எதற்கு? தென்னாடு, திராவிடநாடு வடநாட்டுக்கு மார்க்கட்டாக, அவர்களது பிடியிலேயே இருக்கத்தானே! இலங்கை போன்ற நாடுகள் தனித்தியங்கும் போது நம்மால் முடியாத? பாகிஸ்தானின் தனிப் பிரிவுப் பிரச்சினை பேசப்படாதபடி முன் எழுந்த நமது இளர்ச்சி, சுர்ணவின் சொற்கள் கேட்கப்படா முன்னம் தோன்றிய நமது குறிக்கோள், இன்றும் பூர்த்தியாகவில்லை? ஏன்? எதனால்? இங்கு விபூஷணர்களும் நாராயணர்களும்உளளனர். நன்றி தெரியாது, கருத்தறியாது பேசிட அண்ணாமலைப் பிள்ளைகளும், காமராஜர்களும், சுப்பையாக்களும் உளளனர். தோழர் சுபையா சமீபத்தில் மைகெல்லாம் செகுகும் சிவலிங்கத்திற்கும் வித்தியாசம் தெரியாது என்ற கூறிய செய்தியை சுதேசமித்திரன் பத்திரிகையில் பார்த்தேன். அவருக்குப் புரியவைக்கிறேன்.

இதோ, செக்கு சாதாரண மாம் அதில் சாதாரண மனிதன், சாதாரண மாடுகளைக் கட்டி ஓட்டி எண்ணெய் ஆட்டுகிறான்.

சிவலிங்கம் ஆரியத்தினால் ஏற்படுத்தப்பட்டு, இவர் போன்ற மக்களையே மாடுகளாகக் கட்டி அரியம் எண்ணெய் அட்டுகிறது. இதுதான் இரண்டுக்கும் உள்ள வித்தியாசம். நாங்களறிந்ததைத் தெரிந்துகொள்ளட்டும் தோழர் சுப்பையா அவர்கள். நாம் கூறுவது அத்தனையும் அதிகார ஆசையால்ல, ஆட்சியின்பால் காங்கள் கொண்டுள்ள காதலுமல்ல. ஆனால் அறிவுரைதான்: ஆளட்டும் நன்றுக என்ற நல்லெண்ணத்தோடு.

காந்தியார் சொன்னதென்ன?

ஒரு நாட்டை இன்னொரு நாடு அடிமைப்படுத்தி ஆளும் நாள் மலையேறி விட்டது. அது இனி நடவாது. வேண்டுமானால் வியாபார ஒப்பந்தங்கள் மூலம், வாணிபக் கொள்கை மூலம், ஒரு நாட்டை இன்னொரு நாடு கொள்ளையடிக்கலாம். ஆதிக்கஞ்செலுத்தலாம். நமது நாடு,—திராவிட நாடு—எவருக்கும் அடிமைப்பட்டதல்ல. அசோகன், கலிங்கம் தந்த பாடத்தோடு நின்றான். அக்பர்கூட அடியெடுத்துவைக்காத நாடு ஆனால்எப்படியோ, ஆங்கிலேயனால் ஒரே இந்தியாவோடு சேர்த்து ஆளப்பட்டது என்ற ஒரே காரணத்தால் இன்னும் சேர்ந்து வாழவேண்டுமென்பது பொருத்தாது. பர்மா பிரிவினை ஏற்பட்ட அன்று காந்தியார் தது யங் இந்தியா (Young India) பத்திரிகையில் தெளிவாகக குறிப்பிட்டுள்ளார். அதாவது "சுதந்திர இந்தியா. இனி, இனம், மொழி, கலாச்சாரம் முதலியவற்றால் வேறுபட்ட எந்தப் பகுதியும் தனித்து சுதந்திர நாடாக வாழ்வதைத் தடுக்காது" என்று எழுதியுள்ளார். அதைத்தான் இன்று வற்புறுத்துகிறோம்.

சில நாட்களுக்கு முன் சென்னைவந்த இந்திய பார்லிமெண்ட் தலைவர் தோழர் அல்லங்கர் அவர்கள், வடநாட்டார் தென்னாட்டின் மேல் ஆதிக்கம்செலுத்தவில்லை. அப்படிசொல்வதுசரியல்ல'என்று பேசியிருக்கிறார். இது உண்மைதானா? யோசித்துப் பாருங்கள் இந்தியாவில் தங்கம் தோண்டி வெடுக்கப்படுவதை கோலாரில் மட்டுந்தான். ஆனால் அதன் விலை நிர்ணயிக்கப்படுவது பம்பாயில்தானே! யார் மறுக்கமுடியும்? மைசூரைத் தவிர மற்ற இரும்பு ஆலைகள் எல்லாம் வடக்கேதானே! மில்கள் ஆதிக்கம் எங்கே? அங்கேதானே? மறுக்கமுடியுமா?

ஓமந்தூரின் உள்ளக்கிடக்கை!

வெள்ளைக்காரன் இந்நாட்டை ஆண்டான்! வரி உருவித்தான். ஆனாலும் அதை நாட்டைச் சீர்திருத்தவே செலவிட்டான். இருப்புப் பாதை, தபால், தந்தி, பாலம், பள்ளி, ஆஸ்பத்திரி பாதைகள் ஆகியவற்றை யுண்டாக்கினான். போர்க் காலத்தில் கமிட்மிருந்து பெற்ற தொகையை ஸ்டர்லிங் கடனுக்கித் திருப்பி தருவதாக தன கூறுகிறான் ஆனால் அவன் கொள்ளையடித்த தது வேறு வழியில்-அதாவது அவனது நாட்டு வாணிபத்துக்கு, உற்பத்திச் சரக்குகளுக்கு, இந்த நாட்டை கல்லாதொரு மாக்கட்டாக, விற்பனைச் சரக்காகக் கொண்டான். அதுபோலவேதன் இன்று வடநாடு வாணிபம் மூலம், பொளுதாரம் மூலம் நம்மை ஆதிக்கம் செலுத்துகிறது. அதனை விலக்கவேண்டும் என்று கூறுகிறோம். இதனைச் சில நேர்மையுள்ள காங்கிரஸ்காரர்களும் உணர்கிறார்கள்அவர்களிலமுன்னாள் முதல் மந்திரி தோழர் ஓ. பி. இராமசாமி ரெட்டியாரும் ஒருவராவார். அவர் ஆட்சிக்காலத்தில் தென்னாட்டில் ஒரு சர்க்கரை ஆலை, திருவண்ணாமலையில் ஏற்படுத்த அனுமதியளித்து ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளார். அதில் அவர் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அதாவது, அந்த சர்க்கரை ஆலைக்குத் தேவையான மூலதனத்தில் நூற்றுக்கு அறுபத்திஐந்து பங்கு (65%) தென்னாட்டிலேயே வசூலாக வேண்டும் என்று. இன்றோ ஒரே நாளில் வடவர் அதன் பங்குகள் அனைத்தையும் பெறுவர் அல்லவா?

"பிராம்மண சங்கம்" பிறந்ததேன்?

அடுத்த நாம் சமுதாயச் சீரழிவைப் போக்கி "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற பண்பாட்டை உண்டாக்கப் பாடுபட்டு வருகிறோம். எனவே பார்ப்பனர்கள் எரிச்சலைக்கண்டு நடுங்கவேண்டாம். எம்மோடு கலந்து வாழுங்கள், நீங்களும் எம்மைப்போல் மனிதர்களாக என்றுதான் புத்திமதி சொல்கிறோம். இந்துபத்திரிகையின் குடியரசு மலரில் சேலம் கிருஷ்ணய்யர் என்பவர் பிராம்மண சங்கம் ஏன்ஏற்பட்டது என்று விளக்கியிருக்கிறார் அதில் அவர்கூறுகிறார்: காட்டில்திராவிடர், திராவிடநாடு, என்னும் பார்ப்பனரல்லாதார் உணர்ச்சி பொங்கிவிட்டது. அதன் ஆபத்தினின்றும் பிராம்மணர்களைக் காப்பாற்ற அவர்களுக்கு உணர்ச்சியும் எழுச்சியும் ஊட்டவேதான் என்று, இதுவல்ல முறை, எம்முடன் மனிதராக மனிதத் தன்மையுடன் வாழவேண்டும் என்பதுதான்எமது எச்சரிக்கை என்று கூறுகிறோம்!"

மேலும் பற்பல விஷயங்களைப் பற்றிக் குறிப்பிட்டுவிட்டு, மீண்டும் அவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்த மாநாட்டுக் குழுவினருக்கும், வரவேற்றளித்த கணியூர் பஞ்சாயத்து போர்டாருக்கும், மாநாட்டு மக்களுக்கும் தமது நன்றியைத் தெரிவித்துவிட்டுத் தமது தலைமை உரையை முடித்தார். (கு. நி.)

தேவை!

நமது "மாலைமணி"யை விற்பனை செய்வதற்கு கீழ்கண்ட இடங்களுக்கு முகவர் கூடவேண்டிய விற்பனையாளர்கள் தேவை.

தீடுவாரூர்
கும்பகோணம்
காரைக்கால்
தஞ்சை
மாயூரம்
நெல்லிக்குப்பம்,
சீர்காழி
பண்ணுருட்டி

நிர்வாகி, "மாலைமணி"

நாட்டு நடப்பு

—:(o):—

வள்ளுவர் வாலிபர் கழகம்

பெண்ணூர், ஜன. 30—பெண்ணூர், ஸ்ரீராமபுரத்தில் வள்ளுவர் வாலிபர் சமூகம் ஒன்று நிறுவப்பட்டு 14—1—50 அன்று மாலை சென்னை தேர்ந்தெடுக்கப்பட்டது. எம். சுப்ரமணி (தலைவர்) சி. முனிரத்தினம் (செயலாளர்) பி. எஸ். முனிரத்தினம் துணைச் செயலாளர் எம். இராமச்சந்திரன் விளம்பர மேற்பார்வையாளர் பி. பாலகிருஷ்ணன் மற்றும் உறுப்பினர்கள். ஒரு டிராமூர்த்தி, புத்தக சப்ளையர், ஜி. ராஜலட்சுமி எஸ். பி. இராமலட்சுமி ஜி. அண்ணாமலை வி. கன்னியப்பன், டி. பி. கண்ணன், பி. ராஜுசாமி, சின்னசாமி எம். அப்துல் ரஹீம் ஆகியோர் 15—1—50 காலை 10 மணிக்கு டி. வி. கோவிந்தராஜ முதலியார் அவர்கள் தலைமையில் சி. முனிரத்தினம் முன் மொழிய பெரியார் (பெண்ணூர்) தி. மு. கழகத்தின் தலைவர் மு. கி. வேணுபிள்ளை வாழ்த்துரை வழங்கினார். சென்னை சென்னல் வி. ஆர். டபுடு அவர்களால் தலைமை தாங்கப்பட்டு கூட்டம் 12 30 மணிக்கு இனிது முடிந்தது.

* * *

மதுரை மாவட்டத் தமிழாசிரியர்கள் மாநாடு

சோழை, ஜன. 30—23 1 50 இரவு பெரியகுளம் மீ. க. இளமுருகனார் இல்லத்தில் தேவராம் நாராயணசாமி செட்டியார் தலைமையில் தமிழாசிரியர்கள் கூட்டம் ஒன்று கூடியது. தமிழாசிரியர்கள் முறைகள் பற்றியும் தமிழ் முதல் மொழி என்ற அரசினர் கூறிய எட்டாவில் நிகழ்வதற்கும், அதற்குச் சாதகம் தமிழாசிரியர்கள் ஒற்றுமையாக இல்லாத முறையே என்றும் எடுத்துச் சுட்டிப் பேசினார்கள். அத்தனைனை நீக்க மதுரை மாவட்டத் தமிழாசிரியர்கள் மாநாடு ஒன்று அவசியம் கூட்ட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. அரசம்புர் முழுச் செயலாளர்களாக கோவை க. சண்முகசுந்தரம் அவர்களும் விருதுநகர் நிருமறன் அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். புன்னிலைங்கள் சேரிக்க பெரியகுளம், சோழவந்தான் தாலுகாக்களும் தேனி தமிழாசிரியர் நி. இ. கல்லூரி ஆசிரியர்களும் நின்றால், மதுரை கோரி, மதுரை தாலுகாக்களும் நின்றால் நிலக்கோட்டை தாலுகாவிற்கு நிருமலம் தாலுகாவிற்கு நிருமலம் தாலுகாவிலும் அவர்களும் நிலக்கோட்டை தாலுகாவிற்கு சம்மலர, வத்தலக்குண்டு அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மாவட்டத்திலுள்ள தமிழாசிரியர்கள் அனைவரும்கள் மாநிலம் வேலை பார்க்கும் பள்ளிக்கூடம், முகவரி சேர்ந்த விபரங்களுடன் கோவை க. சண்முகசுந்தரம், தபால் மதுரை மாவட்டத் தமிழ்த் தொண்டர் சமூகம் கோவை என்ற முகவரிக்கு எழுதாமல் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

* * *

வ. உ. சி. நூல் நிலையத் திறப்பு விழா

குருவிக்காரன்பட்டி, ஜன. 26—19-1-50 வியாழக் கிழமை மாலை 5 மணிக்கு குருவிக்காரன்பட்டி வ. உ. சி. நூல் நிலையம் தலைவர் விழா நடைபெற்றது. கல்லூரி பேராசிரியர் ஜூனி ஜூலைக் கரி (பதிவுமூத்த நிலையர்) தோழர் பெரியண்ணன் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

தோழர் பெரியண்ணன் அவர்கள் வ. உ. சி. நினைவுகளையும் அவர்கள் வாழ்வு பற்றியும் தான் நிலையமென்னும் பொருள்பற்றி பேசி நிலையத்தைத் திறந்து வைத்தார். பின்பு குருவிக்காரன்பட்டி சோழர் தாரால் நூற் நிலையத்தின் சார்பாக ஒரு கண்டி சட்டமேல் வைத்து அளிக்கப்பட்டது. பிறகு நூல் நிலையத்தின் சார்பில் அரசர்மடம் தோழர். கு. எஸ். மனோகரத்தினம் அவர்களின் இன்னிசைக் குழுவுடன் ஒரு இன்னிசை அரங்கேற்று நிகழ்ச்சி நடைபெற்றது. அதனமயம் வ. உ. சி. நூல் நிலையத்தின் சார்பாக தோழர் மனோகரத்தினத்திற்கு ஒரு மெடல் அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

23-1-50 மேற்படி நிலையத்திற்கு நிர்வாகக் குழுவினர்கள் தேர்ந்தெடுப்பதற்காக மாலை 5 மணிக்கு தோழர் எஸ். வி. இராமசாமி தலைமையில் கூட்டம் கூடி கீழ்கண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டது.

* * *

கோம்பை தமிழ் இல்ல நான்காவது ஆண்டு விழா

கோம்பை, ஜன. 22—கோம்பை தமிழ் இல்லத்தின் நான்காவது ஆண்டு விழா திருச்சி தமிழர்கழக தலைவர். தமிழ்ஞர் இ. ஆ. வெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில் மிகு நெருக்கடியுடன் நடைபெற்றது. இல்லத் தலைவர் சண்முகசுந்தரம் ஆண்டு அறிக்கை வாசித்தார். கோம்பை செட்டியார் பள்ளித் தலைமையாசிரியர், ரா. மா. சொக்கலிங்கம் அவர்களும் விழாச் செலவு முழுவதையும் ஏற்றுக்கொண்டார்கள்.

தோழர் விசுவநாதர் மேலும் பெருமை எடுத்துப்பிட்டதாவது:—சாதி, மத, அரசியல் கட்சிகளுக்கு இவை முன் தமிழர்கள் ஒன்றுபட இயலாமல் இருக்கின்றனர். ஒற்றுமை தமிழர்கள் ஒன்றுபடுவதற்கு வழி ஒன்றுதான் உண்டு. அதுதான் தமிழ்மொழியாகும். இத் தமிழைப் படித்த இன்னவர்களாக புரச் செய்வதன்மூலம் தமிழர்கள் ஒற்றுமையடையலாம். தமிழினத்தின் முன்னேற்றம் தமிழர்கள் இன்னும் என்னதை உலகம் நிற்க வேண்டும். நிருக்குறள் என்ற ஒரு நிருவள்ளுவனும் அருளிச் செய்யாவிடுந்தால் தமிழ் என்று ஒரு மொழியிருக்கிறதென்றும், தமிழர்கள் என்ற ஒரு இனமிருக்கிறதென்றும் இன்று உலகத்தார் அறிந்திருக்கவே முடியாது. அத்தனை சிறந்த தமிழ் நாட்டிலே பெரும்பான்மையான தமிழ் மாணவர்கள் படிக்காமலிருப்பது வருந்தற்கே நிருக்குறள் கற்க எல்லோர்களுக்கும் படிப்பளியும் முடியுமானதாகவேண்டுமென்று தோழர் எஸ். எஸ். மனோகரன் சிறிது நேரம் கூட்டம் இனிது நடந்தது.

* * *

சூலூர் சொற்பயிற்சிக் கழகம்

21—1—50 நாள் 8 30 மணிக்கு சென்னியிலுள்ள கழகச் சட்டிடத்தில் உயர்தர பட்டதாரி மொழி ஆசிரியர் தோழர் ஜெயராஜ் தலைமையில் "மேல் நாடும் மேற்கோளும்" என்னுமதைப்பற்றி சொற்பொழிவு நடைபெற்றது. நிலையும் மற்ற அவர்தன்னும் பேசிய பின் செயலாளர் இ. எஸ். அருணாசலம் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

அமெரிக்க நிறுவனங்களுக்கு மோட்டார் ஓட்ட பயிற்சி

நியூயார்க், மே. 5—நியூயார்க் நகரில் பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு மோட்டார் ஓட்ட சம்மதிக்கப்பட்டு வருகிறது.

43 ஸ்டேட்களில் 6191 பள்ளிகளில் 81000 மாணவர்களுக்கு சொற்ற ஆண்டு மோட்டார் ஓட்ட சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டதாம்.

தி. மு. கழகக் கூட்டங்கள்

8—2—50

அய்யம்பேட்டை:— இரா. நெடுஞ்செழியன், வாடிப்பட்டி:— (மாலை) சி. என். அண்ணாத்துரை, எஸ். ஜீவரத்தினம், என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத்

நிலக்கோட்டை:—(இரவு) சி. என். அண்ணாத்துரை என். ஜீவரத்தினம், என். வி. நடராசன், ஈ. வி. கே. சம்பத், இ. காத்தான்.

9—2—50

பட்டிவீரன்பட்டி:—(மாலை) சி. என். அண்ணாத்துரை, என் ஜீவரத்தினம், என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத்.

திண்டுக்கல்:—(இரவு) சி. என். அண்ணாத்துரை, என். ஜீவரத்தினம், என். வி. நடராசன், ஈ வெ. கி. சம்பத்

10—2—50

மதுராந்தகம்:— சி. பி. சிற்றரசு, காஞ்சி. கல்யாணசுந்தரம்.

(மதுரை மாவட்டம்) கூடலூர் கம்பம் தேனி } சி. என், அண்ணாத்துரை என். வி. நடராசன், என். ஜீவரத்தினம், ஈ வி. கே. சம்பத்,

"குடியரசின்" படையெடுப்பு

"காந்தியார் சாந்தியடைய"

மூசிறி, பிப். 3—இவ்வூர் சம்டிவிஷனல் மஜிஸ்டிரேட் கோர்ட்டில் "காந்தியார் சாந்தி அடைய" என்ற தலைப்பு, அச்சிடப்பட்டு, வெளியிடப்பட்ட முறையே சோழர்கள் எ. வி. பி. துரைசாமி, பெரியண்ணன், டி. வி. கல்யாணசுந்தரம் ஆகியோர் மீது சர்க்கார் தொடரப்பட்ட வழக்கு முதல் முறை இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மிராக்ஷன் தாம்பிற்கு இருந்து திரை மேஜிஸ்ட்ரேட் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. மிராக்ஷன் தாம்பிற்கு இருந்து திரை மெஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் குமாரி வெங்கடேசன் ஆஜராகி. மூன்று தோழர் துரைசாமி, தான் குற்றவாளி அல்ல என்று விசாரணை செய்ய வேண்டுமென்று கூறியபின், 2, 3-வது எதிரிகளின் சார்பாக வழக்கறிஞர் எஸ். ஜி. ராஜகோபாலு அட்வகேட் பி. சென்னகேசவும் தோழர் வெங்கடேசனும் வழக்கு விசாரணை செய்தலில் வழக்கு 14-ந்தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ந-நி)

* * *

"அழியட்டுமே திராவிடம்"

மூசிறி, பிப். 3—இவ்வூர் சம்டிவிஷனல் மாஜிஸ்ரேட் கோர்ட்டில் "அழியட்டுமே திராவிடம்" என்ற தலைப்பு அச்சிட்டு வெளியிட்டதற்காக தோழர்கள் பெரியண்ணன், டி. கே. தங்கவேலு ஆகியோர் மீது சர்க்கார் தொடரப்பட்ட வழக்கில், மிராக்ஷன் தாம்பில் ஆஜரான தோழர் வெங்கடேசனே மேலும், தோழர்களின் சார்பாகவும் அட்வகேட் பி. சந்தானமும், வழக்கு நிருத்தம் செய். தோழர் துரைசாமியும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கு 14-தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ந-நி)

இனி நடப்பவை

திண்டுக்கல்:—இவ்வூர் தி. மு. க. மனோகரன் சார்பில் 8 2 50 புதன்கிழமை 7-மணிக்கு ஓர்பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர் இ. காத்தான் தலைமைவகிப்பார். தோழர்கள் சி. என். அண்ணாத்துரை, ஈ. வி. கே. சம்பத், என். வி. நடராசன், என். ஜீவரத்தினம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

மதுராந்தகம்:—இவ்வூர் தி. மு. க. மனோகரன் சார்பில் 10-1-50 வெள்ளிக்கிழமை மாலை 5-மணிக்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். தலைமை தோழர்கள் சி. பி. சிற்றரசு, காஞ்சி. கல்யாணசுந்தரம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

* * *

சமரசுடி:—தோழர் எண்ணாரன்—தோழியர் பொன்னம்மாள் திருமணம், 9-2 50 வியாழக்கிழமை 8-மணியளவில், முத்தம்பட்டி மாலவாடி தெரு 5 என்னும் இல்லத்தில் நடைபெறும். தோழர் நாராயணசாமி தலைமை வகிப்பார். தோழர்கள் மு. கருணாநிதி, முரசு சண்முகவேலன், மீ. க. இளமுருகனார், அரங்கண்ணல், கலைமணி சோமசுந்தரம் ஆகியோர் பேசுவர். அன்று மாலை "திருமணம்" என்ற தலைப்பில் ஓர் "கலி அரங்கம்" நடைபெறும்.

"கருஞ்சட்டை ஒழியட்டுமா"

சென்னை, செப். 6—"கருஞ்சட்டை ஒழியவேண்டும்" என்ற தலைப்பில் ஆசிரியர் தோழர் விழுப்புரம் அலகர்மீதும், வெளியிடப்பட்ட சோழர் திருவுக்கரசு, அச்சிட்டவரான தோழர் எஸ். என். மூர்த்தி ஆகியோர் மீதும்நேற்று காலை 12-மணிக்கு, அரசுக்கு எதிர் சென்னை பிரதம மாகாண மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு மார்ச் 11-ந் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. மூவரும் ஜாமீனில் வெளிவந்தனர். (ந-நி)

அறிவிப்பு

ரெலிஜ மூட்டைப் பவுடர், மூட்டைப்பூச்சி, எறும்பு முதலிய வகைனி ராசமாகி, அயர்ந்த நித்திரை தருகிறது சாம்பிள் டன் 1-க்கு 8 அணாவுக்கு அனுப்பவும் G பழனியப்பமுதலியார், மதுரை.

நெல் அறைக்கப் புதிய முறை

நெல் அறைக்கும் முறையை அடியோடு மாற்றி செய்வதன் மூலம் சென்னை மாகாணத்தில் சுமார் 2 லட்சம் டன் அரிசி அதிகப் படியாகக் கிடைக்குமென்று கூறப்படுகிறது. இம்மொழுங்கு சென்னைக்கு மட்டுமிருக்கும், மத்திய உணவுமந்திரி சபையின் ஒரு முக்கிய தோழர் எஸ். வமர, இந்த மாகாணத்தின் நெல்லியும் பிரதேசங்கள் பலவற்றில் இதைக் கண்டாசாக செய்து காட்டியிருக்கிறார். ஜனவரி 31-ந் தேதி தஞ்சாவூரில், இந்த முறை பயன்பட்சாத்தமாகச் செய்து காட்டப்பட்டது. புயலுமுன்னர் பாளையங்கோட்டை, தற்போதுள்ள நிலையிலேயே நெல்லை, புழுங்கல் இரண்டுமே அதிகப்படியாக 41 சதவிதம் அரிசி கிடைக்கக்கூடுமென்ற தெரிய வந்தது. அதிகப்படியாக கிடைக்கும் அரிசியின் அளவு மிகச் சொற்பமாகவேயிருப்பினும், ஒன்றுமில்லாதிருப்பதைவிட 2 லட்சம் டன் அரிசி அதிகப் படியாகக் கிடைக்கக்கூடுமென்றும், இதன் மூலம் சுமார் 10 கோடி ரூபாய் இந்த மாகாணத்திற்கு மிச்சமாகும் என்றும் கூறப்படுகிறது.

சஞ்சலுஜிஸ்ரேஷன்—ரும், திவான் சர்வே அதிகாரியும் பிரான்ஸ் அரசியல் சோதகர்களாகவும், மி. வின்சன் மாஜிஸ்ட்ரேட்டாகவும் மாகாண அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டதை மேல் மாற்றினர். புதிய முறைப்படி நிட்டம்பட்ட அரிசியின் தரம் மாகாண சர்க்கார் நிணைத்துள்ள தரத்திற்கும் சமமாக இருப்பதைக் கண்டு அவர்கள் திருப்தியடைந்தனர்.

கட்டுப்பாடு செய்யப்படாத இரும்பு எஃகு சமான்கள் இறக்குமதி

கட்டுப்பாடு செய்யப்படாத இரும்பு எஃகு சமான்கள் இறக்குமதி அமைகின் வழிகாட்டுவது சம்பந்தமாக இதுவரை, கல்கத்தா, இரும்பு எஃகு கண்ட்ரோலர் எஃகு இறக்குமதி கண்ட்ரோலரால், கவனிக்கப்பட்டுவந்த எல்லா விண்ணப்பங்களும், 1950 ஜனவரி ஜூன் அமைதி கால ஆரம்பத்திலிருந்து கல்கத்தா டெபுடி பிரதம இறக்குமதிகள் கண்ட்ரோலரால் கவனிக்கப்பட வேண்டுமென்ற இந்திய சர்க்கார் நிர்மானித்திருக்கின்றனர். ஆகவே, இறக்குமதியாளர்கள் தங்கள் எண்ணங்களை இனிமேல், கல்கத்தாவிலுள்ள டெபுடி பிரதம இறக்குமதி கண்ட்ரோலருக்கே அனுப்பவேண்டும். 1950, ஜனவரி ஜூன் இறக்குமதி அமைகள் வழங்குவது சம்பந்தமான பொதுக் கொள்கையை விளக்கி வர்த்தக மந்திரி காரியாலயம் தனியாக ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறது. இறக்குமதி வர்த்தகக் கட்டுப்பாடு தொடர்பின் முதலாவது பாகத் நிலைகளில் இறக்குமதிக்கான அனுமதிகள் முன்போலவே புதுடில்லி, பிரதம இறக்குமதிக் கண்ட்ரோலரிலேயே வழங்கப்பட்டு வரும்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1